பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 17 திங்கட்கிழமை (30.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 154

# நாடு முழுவதிலும் முப்படைகளும் உஷார் நிலையில்

# புலிகளின் இரவுத் தாக்குதல் தொடரலாம் என எதிர்பார்த்து

## நான்கு குண்டுகள் வீசப்பட்டதாகத் தகவல்

கொழும்பு,ஏப்ரல் 30

**விடுதலைப் புலிகளின் இரவு நேர வான் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுவதால் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் - நாடு முழுவதிலும் - முப்படையினரும் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.**

**வான் புலிகளின் விமானங்கள் நான்கு குண்டுகளை வீசித் தாக்கியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.**

**ஞாயிறு விடியற்காலையில் விடுதலைப் புலிகளின் இரண்டு விமானங்கள் கொலன்னாவில் உள்ள எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் மீதும் முத்துராஜவெலவில் உள்ள எல்.ஜி. எரிவாயுக் குதங்கள் மீதும் குண்டுவீச்சுகளை நடத்தியது தெரிந்ததே.**

இந்தக் தாக்குதல்களினால் பெரிய அளவிலான சேதங்கள் இடம்பெறவில்லை என்று விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் இரண்டு விமானங்களுக்கு எதிராக நேற்று அதிகாலையில் முப்படைகளும் கூட்டாக வான் பாதுகாப்புத் தாக்குதல்களை நடத்தின.

அந்தத் தாக்குதல்களில் சிக்கி பொது மக்கள் சிலர் காயமடைய நேர்ந்துள்ளது. காயங்களுக்கு இலக்கான ஐவர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். படைச் சிப்பாய்கள் மூவரும் காயமடைந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்டுநாயக்கா விமான நிலையத்திலும் வான் பாதுகாப்பு சாதனங்கள் இயக்கப்பட்டன. விமான நிலைய நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டு பயணிகள் பாதுகாப்பான பகுதிக்கு நகர்த்தப்பட்டனர். விமான நிலையத்தை நோக்கி வந்த விமானங்கள் வானில் வைத்தே சென்னைக்குத் திசை திருப்பப்பட்டன. பின்னர் நேற்றுக்காலையிலேயே விமான நிலைய செயற்பாடுகள் வழமைக்கு திரும்பின. (அ-சி)

## 'உதயன்' அலுவலகச் செய்தியாளர் யாழ்.நகரில் நேற்று சுட்டுக்கொலை

### குடாநாட்டு ஊடகத்துறை மீதான கொடூரங்கள் நீடிப்பு



யாழ்ப்பாணம்,ஏப்.30

'உதயன்' பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் செல்வராஜா ரஜிவர்மன் (வயது 24) நேற்று யாழ். நகரப் பகுதியில் - பட்டப்பகலில் - சுட்டுக்கொல்லப்பட்டார்.

புத்தூர் கிழக்கு ஆவரங்காலைச் சேர்ந்த ரஜிவர்மன் நேற்றுமுன்தினம் இரவு 'உதயன்' ஆசிரிய பீடத்தில் தமது பணியை முடித்துக் கொண்டு நேற்றுக் காலையில் அலுவலகத்திலிருந்து புறப்பட்டார். நேற்று மதியம் ஆசிரியபீடப் பணிக்குத் திரும்ப வேண்டிய அவர் திரும்பவில்லை.

காலை 10 மணியளவில் யாழ்.ஸ்ரான்லி வீதியில் - இராசாவின்தோட்ட வீதியிலிருந்து சுமார் ஐம்பது யார் தூரத்தில் - அவர் வந்து கொண்டிருந்தபோது இனந்தெரியாதோரால் சுடப்பட்டார். அவ்விடத்திலேயே அவர் மரணமானார்.

பின்னர் சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். மேலதிக நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் பூர்வாங்க மரண விசாரணைகளை நடத்தினார். சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

'உதயன்' பத்திரிகைக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்து நீடித்தவண்ணமுள்ளன. ஆறுபேர் கொண்ட - முகமூடி தரித்த - ஆயுததாரிகள் (06ஆம் பக்கம் பார்க்க)

## வான் புலிகளின் நேற்றைய தாக்குதலால் பாரிய சேதம் இல்லை என்கிறார் அமைச்சர்

கொழும்பு,ஏப்.30

நேற்று அதிகாலை வான் புலிகளின் போர் விமானங்கள் கொலன்னாவையிலும் முத்துராஜவெலவிலும் நடத்திய குண்டுத் தாக்குதலினால் பாரிய சேதம் எதுவும் ஏற்படவில்லை.

ஆனால், வான் புலிகளின் போர் விமானங்கள் இரணைமடுவில் தரையிறங்கிய இடத்தை குறிவைத்து விமானப் படையினர் கடும் குண்டுத் தாக்குதலை நடத்தினர்.

இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பு கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல எண்ணெய் - எரிபொருள் - நிலையங்கள் மீது வான் புலிகளின் போர் விமானங்கள் நடத்திய தாக்குதல் குறித்து அமைச்சர் ஊடகங்களுக்கு மேலும் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டு இலகு ரக விமானங்கள் வானில் பறப்பதாக விமானப் படையினருக்கு நேற்று அதிகாலை 1.30 மணிக்குத் தகவல் கிடைத்தது.

அந்தத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட படையினரின் பதிலடி வான் எதிர்ப்பு நடவடிக்கைகளால் புலிகளின் இலக்குகள், நோக்கம் நிறைவேறவில்லை.

அதன் காரணமாக விடுதலைப் புலிகளின் விமானங்கள் திரும்பிச் செல்லும் போது கொலன்னாவை, முத்துராஜ வெல ஆகிய எண்ணெய் நிலையங்கள் மீது நான்கு குண்டுகளை வீசிவிட்டுச் சென்றனர்.

இந்த நான்கு குண்டுகள் வெடித்த போதும் பாரிய சேதங்கள் ஏற்படவில்லை - என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

## கதேபசுபிக், எமிரேட்ஸ் நிறுவனங்கள் விமான சேவைகளை நிறுத்தின

கொழும்பு, ஏப்.30

கொழும்பில் விடுதலைப் புலிகள் நேற்றும் வான் தாக்குதலை நடத்தியதை அடுத்து 'கதே பசுபிக்' மற்றும் 'எமிரேட்ஸ்' விமான சேவை நிறுவனங்கள் இலங்கைக்கான தமது சேவைகளை இடைநிறுத்தியுள்ளன.

கொலன்னாவ எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது வான் புலிகள் தாக்குதல் நடத்தியபின்னர், கொழும்புக்கு மேலாக பறந்துசென்ற 'கதே பசுபிக்' விமான சேவை நிறுவனத்தின் விமானம் மீது தரையிலிருந்து வான் எதிர்ப்புத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதனையடுத்தே தனது சேவைகளை நிறுத்த சம்பந் தப்பட்ட நிறுவனம் முடிவு செய்துள்ளது.

ஆசியாவின் மூன்றாவது பெரிய விமான சேவை நிறுவனமான 'கதே பசுபிக்' கடந்த மாாதம் கட்டுநாயக்கா விமானத் தளம்மீது முதற்தடவையாக விடுதலைப் புலிகள் வான் தாக்குதல் நடத்தியமையை அடுத்தும் தனது சேவைகளை சிலவாரங்கள் இடைநிறுத்தி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முத்துராஜவெல எரிபொருள் குதம் மீது வான் புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்த சில நிமிட வித்தியாசத்தில் கொழும்பு வான் பரப்பில் பறந்துகொண்டிருந்த 'எமிரேஸ்ட் நிறுவனத்தின் விமானம் மீது வான் எதிர்ப்புத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வான் புலிகளின் விமானம் எனக் கருதி இந்த விமா னம் மீது எதிர்ப்புத் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்கு தல் குறித்து இலங்கை அரசுக்கு முறைப்பாடு செய்துள்ள அந்த நிறுவனம் இலங்கைக்கான தனது விமான சேவையை இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளது. (அ-1)

## புலிகளின் வான் தாக்குதலை கண்டித்து ரணில் அறிக்கை

### நிரந்தர சமாதானத்தையே வலியுறுத்துகிறார்



கொழும்பு, ஏப்.30

கொழும்பு நகரம் மீது விடு தலைப் புலிகள் நடத்தி வரும் விமானத் தாக்குதல்களைக் கடுமையாகக் கண்டித்திருக்கும் எதிர்க்கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்க இந்நாட் டில் நிரந்தரசமாதானத்தை ஏற்படுத்துவதே பிரச்சினைக்குத் தீர்வாகும் என்றும் வலியுறுத்தியிரு க்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் நேற்று விடுத்த விசேட அறிக் கையில் தெரிவிக்கப்பட் டிருப்பதாவது:-

கொழும்பு நகரம் மற்றும் அதனை அண்மித்த பொது மக்களின் வாழ்க்கையைப் படிப்படியாக துன்பத்துக்குள்ளாக்கி, நாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இலக்காகக்கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்கொள்ளும் வான் தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். விடுதலைப் புலிகள் இயக்கத் தினாலோ அல்லது அரசாங்கத்தினாலோ பொதுமக்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் எவ்வாறான தாக்குதல்களையும்நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை.

**அரசியல் விளையாட்டால் நன்மை கிடைக்காது**

எமது நாட்டின் பாதுகாப்பு நிலைமை நாளுக்குநாள் பயங்கரமாகி மோசமாகி வருகின்றது. விடுதலைப் புலிகளைக் கண்டிப்பதனால் மட்டும் (06ஆம் பக்கம் பார்க்க)

## சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு தொழிலாளர்களது ஆதரவு வேண்டும்

### மேதினச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு,ஏப்.30

புதிய இலங்கை ஒன்றைக்கட்டி எழுப்பும் பயணத்தில் இந்நாட்டுத் தொழிலாளர்கள் வழங்கிய ஒத்துழைப்பை இன்றைய உலகத் தொழிலாளர் தினத்தில் நான் பெருமிதத்துடன் நினைவு கூருகின்றேன்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது மேதினச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

இந்நாட்டுத் தொழிலாளர்களுக்குள்ள சவால்களை அவர்களுடன் கைகோர்த்திருந்த தலைவர் ஒருவர் என்ற வகையில் நான் நன்கறிவேன். பயங்காரவாதமும் அரசியல் வேறுபாடும் தொழிலாளர் இருப்பிற்குத் தொடுக்கப்படுகின்ற அச்சுறுத்தல் என்பதை நாம் அறிவோம். பயங்கரவாதத்தைப்போலவே அரசியல் வேறுபாடும் தொழிலாளர்களுக்கு சிறந்த வாழ்க்கை நிலைமை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான தடை (06ஆம் பக்கம் பார்க்க)

## வேலணையில் உயிரிழந்த அறுவரின் சடலங்கள் நேற்று ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.30

வேலணை முடிப்பிள்ளையார் கோயிலடியில் நேற்று இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததாகத் தெரிவித்து ஆறு பேரின் சடலங்கள் நேற்றுமாலை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சடலங்களை ஊர்காவற்றுறை பதில் நீதிவான் எம்.திருநாவுக்கரசு பார்வையிட்டார்.

முடிப்பிள்ளையார் கோயில் பகுதியில் சுற்றிவளைப்புத் தேடுதல் நேற்று இடம் [illegible]றும் -

அச்சுற்றிவளைப்பின்போது பிரஸ்தாப ஆலய குருக்கள் உட்பட ஆறுபேர் உயிரிழந்தனர் என்றும் ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

இச்சடலங்களில் ஒன்றுடன் காணப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் கொண்டு நிலக்ஷன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ள சடலங்கள் தொடர்பான மரண விசாரணை இன்று இடம்பெறும்.

(அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

இன்று (30.04.2007) திங்கட்கிழமை காலை 9.28 மணி தொடக்கம் 11.35 மணி வரை உள்ள சுபமுகூர்த்த வேளையில்

**V.S.R.நகை மாளிகை**

என்னும் ஸ்தாபனத்தை இல.34, கஸ்தூரியார் வீதியில் மங்களகரமாக ஆரம்பிக்கவுள்ளோம். இத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ குறிப்பு:- இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

உரிமையாளர்,
V.S.R.ஸ்தாபனத்தினர்.

(60185)

## ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்

நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்

### சைவ சமய அறிவுப் போட்டி

நேற்று (29.04.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த தரம் 6 இற்கான சைவ சமய அறிவுப் போட்டிப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் இரத்துச் செய்யப்பட்டு அதற்குரிய மீள்பரீட்சை 02.05.2007 புதன்கிழமை மு.ப. 9 மணிக்கு குறித்த பரீட்சை நிலையத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

(60189) - நிர்வாகத்தினர்.

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும் புத்தகக் கண்காட்சி செவ்வாய், புதன் 01.05.07, 02.05.07 மற்றும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களிலும் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. - 021 222 2573

(சி/52320)

## கண்ணீர் அஞ்சலி



26.04.2007 இல் கொழும்பில் திடீர் மரணமடைந்த எமது முன்னாள் சங்கத் தலைவரும் தனது இளம் பராயத்திலிருந்தே கிராமம் கலை, கலாசார வளர்ச்சி பெற உழைத்தவருமான

அமரர்

**அந்திரேஸ்பிள்ளை யோசவ் இம்மானுவேல்** *(தாத்தா)*

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்களும் அங்கத்தினர்களும்.

(60179)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

*மலர்வு* 17 - 10 - 1953



*உதிர்வு* 30 - 03 - 2007

### திருமதி சின்னராசா சிவபாக்கியம்

கடந்த 30.03.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.04.2007)திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி.சின்னராசா (கணவர்),
பிள்ளைகள்: சி.சிறிகாந்தராசா,
சி.சிறிசங்கர்(பிரான்ஸ்),ம.சீதா, சி.சீத்தா,
சி. சிறிமணிவண்ணன்,
சி.சிறிமயூரன், சி.சிறீவரதராசா,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சயன்ஸ் சென்ரர் வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

(60182)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் தர்மகுலசிங்கம்



மந்துவில் மேற்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தர்மகுலசிங்கம் 29.04.2007 அன்று அகாலமரணமானார்.

அன்னார் நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மகனும் ரஞ்சிதமலரின் அன்புக் கணவரும் அஜந்தன், நிவேதிகா, வர்ணா, தர்சிகா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2007) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இலுவன் இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

மந்துவில் மேற்கு, கொடிகாமம்.

தகவல்: மனைவி.

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.30

பெண் சாரணிய வழிகாட்டுநர் ஆசிரியைகளுக்கான கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

வழிகாட்டுநர்கள், பொறுப்பாசிரியர்கள் ஆகியோரைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

## சமாதான நீதிவான்கள் பட்டம் கிடைத்துள்ளது

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.மாவட்டத்தில் மத்தியஸ்தர்களாக பணியாற்றி ஒரு வருடம் பூர்த்திசெய்தவர்களுக்கு சமாதான நீதிவான் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

நீதியமைச்சின் மத்தியஸ்த சபை ஆணைக்குழு வர்த்தமானி பத்திரிகை அறிவித்தல் ஊடாக இந்த நியமனங்களை வழங்கியுள்ளது.

முதற்கட்டமாக வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மத்தியஸ்தர்களுக்கு சமாதான நீதிவான் பட்டம் வழங்கப் பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மொத்தமுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளில் மத்தியஸ்த சபை முழுமையாக இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் மத்தியஸ்த சபை புதிதாக அமைப்பதற்கு பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(அ-95)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

பல மாதகால இடைவெளியின் பின்

விஜய், அசின், வடிவேல் நடித்த

**போக்கிரி**



(றீல்ஸ்)தினசரி : 11மணி, 3மணி.

## மணமகன் தேவை

பாரம்பரிய சைவ கௌரவ குடும்பம் 1978, கிரக பாவம் 21, செவ்வாய் 2ல், உள்ள அரசசேவை பட்டதாரி பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை.Vegetarian விரும்பத்தக்கது. தோடர்பு: T.P. 2229196(பகல் 8.30 - 5.00)

## மரண அறிவித்தல்

### தம்பு குணரத்தினம்

**(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், கமநல சேவை நிலையம்- நல்லூர்)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த தம்பு குணரத்தினம் 28.04.2007 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாவின் அன்புக் கணவரும் நமணாசாமினி (சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, 4ஆவது வருட மாணவி), கோபிறமணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, கனகரட்ணம், துரைச்சாமி, கோகிலாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரனும் புவனேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற உபயசகுந்தலாதேவி, உமாராணி (லண்டன்), தருமலிங்கம், சண்முகலிங்கம்(லண்டன்),மகேந்திரதேவி, தருமகுலதேவி(கிளிநொச்சி) மற்றும் ஸ்ரீராஜலிங்கம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இன்று (30.04.2007 ) திங்கட்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, 5 மணிக்கு கல்கிசை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

422/1, கண்டி வீதி,
அரியாலை.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை ஸ்ரீபன்

**(இளைப்பாறிய யாழ். மாவட்டக் களஞ்சியக் காப்பாளர், CTB)**



குருநகர், மவுண்ட் கார்மல் வீதியைப் பிறப்பிடமாகவும் சில்லாலை, சென்.ஜேம்ஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை ஸ்ரீபன் 28.04.2007 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் மேரிகில்டாவின் (பேபி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சந்தியோ அந்தோனிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான இராயப்பு - றோசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கிளின்ரன் பக்ஸ் (ஜேர்மனி), மேரிலூயிஸ்(சுஜி - லண்டன்), ஜெமிஸ்ரா அனந் (றஜி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மேரி ஜெயறூட் (ஜேர்மனி), நவஜீவா (லண்டன்) ஆகியோ ரின் அன்பு மாமனும் டனி, ஸ்ரீவ், லீயோ, சுஜீவா, சுஜீறா ஆகியோரின் அன்புப் பேரனும் பிரான்சிஸ்கா எற்வேட்ஸ் , அருட்சகோதரி மேரி லூயிஸ் (திருக்குடும்ப கன்னியர் சபை), ஸ்ரனிஸ்லோஸ், ஜெறோம், சென் ஜேம்ஸ், இருதயநாயகி ஆகியோரின்அன்புச் சகோதரனும் புஸ்பம், றாணி, அருட்சகோதரி ஜெம்மா (திருச்சிலுவை கன்னியர் சபை), லீலா, பஞ்சரெட்ணம், எற்வேட் பங்கிராஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(30.04.2007)திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு சில்லாலை சென்.ஜேம்ஸ் தேவாலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியின் பின்னர் பண்டத்தரிப்பு சென். ஜேம்ஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென். ஜேம்ஸ் வீதி,
சில்லாலை, பண்டத்தரிப்பு.
தொ.பே.: 222 5257

(60184)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### அப்புக்குட்டி மார்க்கண்டு



நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி மார்க்கண்டு நேற்று (29.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அப்புக்குட்டி - குழந்தை தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் புஸ்பன், காலஞ்சென்ற மலர் மற்றும் லதா, சிவரஞ்சினி, சுரேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.04.2007)திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக வேம்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(60190)

தகவல்:
மணியம் (தம்பி).

### அந்திரேஸ்பிள்ளை யோசவ் இம்மானுவேல்(தாத்தா)



அந்திரேஸ்பிள்ளை யோசவ் இம்மானுவேல் (தாத்தா) 26.04.2007 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சில்லையூரைச் சேர்ந்த காலஞ்சென்ற சுவக்கம்பிள்ளை அந்திரேஸ்பிள்ளை, அந்திரேஸ்பிள்ளை எலிசபெத் ஆகியோரின் அருமை மகனும் காலஞ்சென்ற மேரி றெஜினாவின் அன்புக் கணவரும் தயாளி, காலஞ்சென்ற தயாளன், தர்சினி, தர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிங்ஸ்லி, டெஸ்மன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜொயலின், கிருஸ்ரன், ஜோய், யோகன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற ஜோமன், கிளாறம்மா, பேனடேற், அருட்தந்தை கிறிஸ்தோப்பர் ஆகியோரின் அருமைச் சகோதரனும் காலஞ்சென்ற டோமினிக், காலஞ்சென்ற லெஸ்லி பிரான்ஸிஸ், காலஞ்சென்ற வேதநாயகம், டோமினிக்கா, ஜெறி, மாகிறெற், டொமற்றில்டா, வில்சன் யோனாஸ் றயிதா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது பூதவுடல் 28.04.2007 பி.ப. 3 மணி தொடக்கம் 29.04.2007 பி.ப. 7 மணிவரை கொழும்பு ஜயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்று பி.ப. 4 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இன்று காலை கண்டி பொது மாயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(60186)

தகவல்:
அருட் தந்தை T.L.றொகான் CMF

### திருமதி சேதுராணி ஜெயராம்



ஆத்தியடி,பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி சேதுராணி ஜெயராம் அவர்கள் நேற்று (29.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சேதப்பா கிருஸ்ணசிங்கம் - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை ஜெயராம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சத்தியராதாவின் சகோதரியும் சந்திரசேகரம் சபாபதிப்பிள்ளையின்(கனடா) மைத்துனியும் கணேஷாயினி, மதன், ஜெயகிருஸ்ணன், ஐங்கரன் ஆகியோரின் சித்தியும் துவாரகன், ஜனனி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2007) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 8 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாசேந்திரம் ஜெயகோபால்
(சகோதரன்).

### செல்வராசா சுந்தரராசா

**(ஓய்வுபெற்ற இயந்திர இயக்குநர், தொழில்நுட்பக் கல்லூரி)**

இணுவில் மஞ்சத்தடி, காரைக்கால் வீதியைச் சேர்ந்த செல்வராசா சுந்தரராசா நேற்று வவுனியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2007) திங்கட்கிழமை வவுனியாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வா(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகம் மாணவர்களைக் கௌரவித்தது

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் தமது பிரதேச பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையிலும் ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சையிலும் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்துள்ளது.

இக் கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பிரதேச சபை மண்டபத்தில் லயன்ஸ் கழகத் தலைவர் தி.ஸ்ரீ இராமநாதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கலந்துகொண்டார்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் யுவதி ஒருவருக்கு நிகழ்வில் வைத்து தையல் இயந்திரம் ஒன்றையும் லயன்ஸ் கழகத்தினர் வழங்கினர். (207)

## தேவார முற்றோதலும் திருமுறை பாராயணமும்

யாழ்ப்பாணம், ஏப். 30

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவார திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8மணிக்கு யாழ்.நாவலர் வீதியில் உள்ள குருவார அன்ன சத்திர சிவகாம சுந்தரி அம்பாள் ஆலயத்தில் இடம் பெறவுள்ளன. (203)

## புதிய சங்கங்களாக பதியும் படி அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.30

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரிவிற்கு உட்பட்ட சகல கிராம அபிவிருத்திச் சங்கம்,மாதகல் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றை மீள்பதிவு செய்தல் மற்றும் புதிய சங்கங்களைப் பதிவு செய்தல் ஆகிய நடவடிக்கைகளை கிராம அபிவிருத்தித் திணைக்களம் முன்னெடுக்கவுள்ளது.

எனவே, குறிப்பிட்ட சங்கங்கள் அனைத்தையும் கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (202)

## ஏப்ரல் மாதத்துக்கான மண்ணெண்ணெய்

நல்லூர் கல்வியங்காடு தேவகுருநாதன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஜே/106, ஜே/112 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு ஏப்ரல் மாதத்திற்கான 4 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது. (202-111)

## கூட்டம்

யாழ்.புனித மரியாயின் சேனையின் மாதாந்த கொமிசியக்கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறும் என அருட்திரு றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் தெரிவித்தார்.

## நூல் அறிமுக விழா

யோசப்பாலா எழுதிய உளமார (உள சமூக மேம்பாட்டுச் சிந்தனைகள்) என்னும் நூலின் அறிமுக விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.டேவிற் வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியற் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அழகியற் கல்லூரியின் அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக சமூகவியயற்துறைத் தலைவர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் மதிப்பீட்டுரையை அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கமும் நிகழ்த்துவார். (202)

# நல்லூர் பிரதேச சபை அபிவிருத்தித் திட்டங்களுக்கு பதினாறு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஏப்.30

நல்லூர் பிரதேச சபையின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து 6லட்சத்து 5ஆயிரம் ரூபாவும் புனரமைப்புப் பணிகளுக்கென சமூக சேவைகள் அமைச்சால் 10லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து கோண்டாவில் கிழக்கு நாராயணா சனசமூக நிலைய பாலர் பாடசாலை புனரமைப்பு, காரைக்கால் இந்து மயானத்துக்கு குழாய்க்கிணறு அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அமைச்சு ஒதுக்கிய நிதியிலிருந்து காரைக்கால் உதயசூரியன் சனசமூக நிலையம், நல்லூர் வடக்கு சனசமூக நிலையம், கொக்குவில் மேற்கு கலைமகள் சனசமூக நிலையம், திருநெல்வேலி மகாத்மாஜி சனசமூக நிலையம் ஆகியவற்றுக்குக் கட்டடம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-79)


# யாழ். - இளவாலை பஸ் சேவை இடைநிறுத்தம்; மாணவர்கள், ஆசிரியர்கள் பெரும் சிரமம்

வலி. தென்மேற்கு, ஏப்.30

யாழ்ப்பாணம் - இளவாலைப் பாதையில் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் 788 இலக்க பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பிட்ட பஸ் சேவை கடந்த ஒரு மாதகாலமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இப் பஸ்ஸிலேயே இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி, இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு மாணவர்களும் ஆசிரியர்களும் சென்று வந்தனர்.

தினமும் காலையிலாவது ஒரு சேவையை நடத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என மாணவர்களும் ஆசிரியர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (202-135)



கியூடெக் அமைப்பின் கிராமிய சமூக விழிப்பூட்டல் பிரிவினரால் மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையில் அண்மையில் பொருட்காட்சி நடத்தப்பட்டது. நிகழ்வில் கியூடெக் அமைப்பின் பிரதிநிதி ஜோசப் பாலா மங்கள விளக்கேற்றி நிகழ்வைத் தொடக்கி வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்: அருணன்)

## வடமராட்சியில் காணிகளில் இருந்து மண் ஏற்றுவதற்குத் தடை

உடுப்பிட்டி, ஏப்.30

வடமராட்சி பிரதேசத்தில் தனியார் காணிகளிலிருந்து வீட்டுத்தளத்திற்குப் போடுவதற்கான மண் ஏற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே இப்பிரதேசத்தில் வீடு கட்டுவதற்கு தேவையான மணல் ஏற்றுவதற்கு படையினர் தடைவிதித்திருந்தனர். வீட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு சிமெந்து வழங்கப்பட்டுள்ளபோதும் மணல் இல்லாமையினால் பல வீடமைப்பு பணிகள் முடங்கிப் போயுள்ளன.

இந்நிலையில் அத்திவாரத்தளத்திற்கு இட்டு நிரப்புவதற்கென தனியார் காணிகளிலிருந்து மண் எடுப்பதற்கும் படையினர் தடைவிதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-155)

# காணாமற் போன 12 மீனவர்களையும் கடற்புலிகளே தடுத்து வைத்துள்ளனராம்

## தமிழக சட்ட சபையில் தகவல்

சென்னை,ஏப்.30

கடந்த மார்ச் மாதம் நான்காம் திகதி காணாமற்போன குமரி மாவட்டத்தைச் சேர்ந்த பன்னிரண்டு மீனவர்களையும் கடற்புலிகளின் ஒரு பிரிவினரே பிடித்து வைத்துள்ளனர் என்ற தகவல் தமிழக சட்ட சபையில் தெரிவிக்கப்பட்டது.

காங்கிரஸ் உறுப்பினர் கே.ஞானசேகரன், தகவல் கோரும் வேளையின்போது இதனைத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து காணாமற்போன மீனவர்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஓ.பன்னீர்ச் செல்வம் உட்படப் பலரும் கேட்டனர்.

இதேவேளை -

கன்னியாகுமாரி மீனவர்களை நடுக்கடலில் சுட்டுக்கொன்றது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடற்புலிகளே என்று தெரியவந்துள்ளதாக தமிழக பிரதிப் பொலிஸ்மா அதிபர் (டி.ஜி.பி.) அறிவித் துள்ளார். இது சம்பந்தமாக அவர் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருக்கிறார்.

மேற்படி இரண்டு விடயங்களுக்கும் பதிலளிக்கும் வகையில் முதல்வர் மு. கருணாநிதி நேற்றுச் சட்டசபையில் தெரிவித்ததாவது:-

காணாமற்போன 12 மீனவர்களையும் இலங்கையில் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் ஒரு பிரிவினர் பிடித்து காவலில் வைத்திருப்பது தெரியவந்துள்ளது.

இதற்கு முன்பு ஒரு தடவை சட்டசபையில் பேசிய காங்கிரஸார், 'தீவிரவாதிகளை விடுதலைப் புலிகள்' என்று சொன்ன போது உடனே நான் மறுத்து பேசினேன். அன்று கிடைத்த தகவலை வைத்து அவ்வாறு மறுத்தேன்.

ஆனால் இப்போது வந்துள்ள தகவல்களால் அது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. கடற் புலிகளின் சிறப்பு முகாமில் 12 மீனவர்களும் வைக்கப்பட்டுள்ளனர்.

**மரியா படகில் வந்தவர்கள்**

29.03.2007 அன்று குமரி மாவட்டத்தை சேர்ந்த 5 மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதற்கும் கடற்புலிகள்தான் பொறுப்பு என்றும் தெரியவந்துள்ளது. இந்திய கடல் பகுதியில் 11.04.2007 அன்று மரியா என்ற படகும், அதில் இலங்கை மீனவர்கள் 6 பேரும் பிடிப்பட்டனர். அவர்களை பிடித்து விசாரித்தபோது இந்த தகவல்கள் முதற்கட்டமாகத் தெரியவந்துள்ளன.

முன்பு இலங்கை இராணுவம்தான் இந்த சம்பவத்துக்கு காரணம் என்று கருதிக் கொண்டிருந்தோம். இது தொடர்பாக மத்திய அரசுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு, காணாமற்போன மீனவர்களை தேடிக் கண்டுபிடிக்க மத்திய அரசு மூலம் முயற்சி எடுக்கப்பட்டது.

மேலும் கடலோர பாதுகாப்பு படை வான்வெளி பாதுகாப்பு ஆகியவற்றுக்கும் தூத்துக்குடியில் கடலோர காவல் படை வசதிக்காக அங்குள்ள விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குமரி கடலோரத்தில் கடலோர காவற்படை அமைக்க ரூ. 55 கோடி ஒதுக்கி, அதற்காக மத்திய அரசு ஒப்புதல் கேட்கப்பட்டுள்ளது. இலங்கை கடற்படையால்தான் இது போன்ற சம்பவங்கள் நடப்பதாக நாம் கருதிக்கொண்டிருக்கும் நிலையில் விடுதலைப் புலிகள் இந்த சம்பவத்தில் ஈடு பட்டுள்ளது நம் அனைவரையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். புலிகளிடம் உள்ள மீனவர்களை மீட்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் - என்றார். (அ)

# இலங்கை விவகாரத்தில் இந்திய அணுகுமுறையில் மாற்றம்?

## புதிய நிலைப்பாடு விரைவில் தெரியவரும்

புதுடில்லி, ஏப்.30

இலங்கை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பினரும் போர்மூலம் முடிவு காண்பது என்ற தீர்மானத்துக்கு வந்துள்ள இன்றைய இருள் சூழ்ந்த காலகட்டத்தில் என்னவிதமான நடவடிக்கையில் தான் இறங்க முடியும் என்பதுபற்றி மிக விரைவில் இந்திய அரசு ஒரு முடிவுக்கு வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பல்வேறு விதமான யோசனைகள் தற்பொழுது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

இனப்பிரச்சினை விரிவடைந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் வெகுவாகப் பாதிக்கப்படும் பொதுமககளுக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதில் இந்திய அரசு அக்கறை கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு விட்ட இலங்கை இன முரண்பாட்டினால் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டும் ஆயிரக்கணக்கானோர் வீடு வாசல்களை இழந்து அகதிகளாகியுமுள்ளனர்.

இந்த நிலைமையில் இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை ஒரு தீர்வாக அமைய மாட்டாது என்பதில் இந்தியாவின் உயர் மட்ட சிந்தனையாளர்கள் தீர்க்கமாகவுள்ளனர்.

கஷ்டங்களுக்கு உள்ளாகும் மக்களின் - பெரும்பாலும் தமிழ் மக்களின் துன்ப துயரங்கள் இந்திய அரசின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த விடயத்தில் இந்திய அரசு இலங்கை அரசுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு வந்துள்ளது.

''எமக்கென்ற சில கருத்துக்கள் உண்டு; கவலைகள் உண்டு. அவைகளை இலங்கை அரசுக்குத் தெரிவித்து வந்துள்ளோம்.'' என்றவாறு இந்திய உயர் மட்ட பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர்த்து ஏனைய தரப்புகளுடன் இந்திய அதிகாரிகள் தொடர்பு கொண்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. இடம் பெயர்ந்துள்ள மக்களின் பிரச்சினை தொடர்பாக இந்தியா இன்னும் அதிக முனைப்புடன் செயல்பட வேண்டும் என்ற கருத்து இங்கு நிலவுகின்றது.

இதேவேளை இலங்கை மலையகத்தில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் நிறைந்துள்ள பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பது பற்றியும் இந்திய அரசு ஆலோசிப்பதாகத் தெரிகின்றது.

கடந்த 2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் இலங்கை வந்திருந்த இந்திய வெளியுறவு செயலாளர் ஷியாம் சரண் வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற மக்களின் நலன்களிலும் மேம்பாட்டிலும் இந்தியாவுக்கு நெருக்கமாக அக்கறை உண்டு என்று தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நோர்வே அனுசரணையில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பாடு மூச்சுத் திணறிக்கொண் டிருக்கும் நிலையில் ''அடுத்து என்ன?'' என் பதே இந்திய கொள்கை வகுப்பாளர்களின் சிந்தனையை இப்போது குடைந்து கொண்டிருக்கும் கேள்வி.

இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டை உறுதியுடன் ஆதரித்து வரும் இந்தியா, இலங்கை வாழ் தமிழர்கள் பெரும்பாலானவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றினை பேச்சு மூலம் ஒரு இறுதித் தீர்வினைக் கொண்டுவர முடியும் என்றும் கருதுகின்றது.

(ஐ.ஏ.என்.எஸ்)

## சட்டவிரோத மின் பாவனை: மின்சாதனங்கள் பறிமுதல்

சங்கானை, ஏப்.30

வலி.மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மின்னிணைப்புப் பெற்றவர்கள் மின்சாரசபை ஊழியர்களால் இனங்காணப்பட்டு அவர்களின் மின் பாவனைக்குரிய சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 22ஆம் திகதி வலி.மேற்கில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் கிராம சேவையாளரும் மின்சாரசபை ஊழியர்களும் இணைந்து திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

அதன்போது சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மின் இணைப்புப் பெற பயன்படுத்திய உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

தொடர்ந்தும் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OFFER OFFER OFFER OFFER OFFER OFFER OFFER

## ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ



### விசேட சலுகை

எம்மால் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து புடைவைத் தினுசுகளும் திருமணப் பட்டுப் புடைவைகளும் நிதான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன என்பதை எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு, ரூபா 15000 இற்குக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு மக்ஸி துணி அன்பளிப்பாக வழங்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ**
இல.13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம்.


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

எமது சக நண்பன்
யோ. கிருப்பாகரனின் அன்புத் தாய்
திருமதி
**யோகானந்தம் ஜெகஜெனனி**

கடந்த 31.03.2007 அன்று சிவபதமடைந்த அவர்களின் திடீர் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடித்தொகை அபிவிருத்திக் கல்வி
முதுமாணி மாணவர்கள் (2005),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் கந்தன் மூத்ததம்பி
(வேம்பிராய் பரதி சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்)
திதி:30.04.2007திங்கள்

மலர்வு
04 . 07 . 1935

உதிர்வு
22 . 04 . 2005

பாசமுடன் எமை வளர்த்து பார்புகழ வைத்தவரே!
நேசமுடன் ஊர் உயர உறங்காது உழைத்தவரே!
வாசமுள்ள மலருபோல் மணம்பரப்பி நின்றவேளை-எமை
வாடவைத்து வானுலகம் சென்று -இன்று
ஈராண்டுகள் ஆனதுவே?

கலையாத நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:மு.செல்வராசா(மகன்), மீசாலை வடக்கு,வேம்பிராய்,கொடிகாமம்.
அன்பு மனைவி,மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

877 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

துலாம் **02 23 34 49**

**27-04-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 5863539 - 5877406

ஜக்பொட் பரிசு ரூபா. 2,221,500/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 300,127 | 10/- | 3,001,270/- |
| 2 இலக்கங்கள் | 27,621 | 20/- | 552,420/- |
| 1 இல. + லக்கினம் | 27,355 | 30/- | 820,650/- |
| 2 இல. + லக்கினம் | 2,464 | 100/- | 246,400/- |
| 3 இலக்கங்கள் | 726 | 500/- | 363,000/- |
| 3 இல. + லக்கினம் | 70 | 5,000/- | 350,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,221,500/- | - |
| மொத்தம் | | | 5,733,740/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 358,372 | | 6,757,240/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,891,850/-

தொடர் இல. 5877407 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 மே மாதம் 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் - ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5873780-4-28 |
| அனுராதபுரம் | 5871124-1-29 |
| திருகோணமலை | 5866817-8-08 |
| பதுளை | 5873500-1-85 |
| இரத்தினபுரி | 5867472-4-31 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## குழந்தை யேசுவுக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே,

என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உறுதுணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

குழந்தை யேசுவின் அடியாள்.


## கப்பல் சேவை

புகையிலை, சுருட்டு, வெங்காயம் மற்றும் பனை உற்பத்திப் பொருள்கள் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்ப விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

G.திருவருள்
KOBIRAJA TRANSPORT
கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.
தொ.பே. 0773638459


## தவறிவிட்டது

அளவெட்டிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் றெஜீலா செல்லத்துரை என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல8186657 17V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து "காயத்திரி கோட்டம்" வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும்.


உள்நாடு, வெளிநாடுகளுக்கான கடிதங்கள், பொதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்

**திருமுருகன் கொம் நெற்**
259,கே. கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. : 7835
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. தொ.பே: 7310


## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, சம்பியன் நந்தாவில் வீதியில் அமைந்துள்ள சகல நவீன வசதிகளுடன் 2¾ பரப்பு சதுர காணியில் அமைந்துள்ள மேல் மாடியுடனான புதிதாகக் கட்டப்பட்ட வீடு விற்பனைக்குண்டு.நீர், மின்சாரம் மற்றும் நிலத்திற்கு மாபிள் (Terrosow) போன்ற சகல வசதிகளுடன் அமைந்துள்ளது.இத்துடன் புதிய சக Maruthi Suzuki vxi . zen கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 7/1, நந்தாவில் லேன், சம்பியன் லேன் ஊடாக, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (60138)

## ஆனந்தி திருமணசேவை

காலசர்ப்ப தோஷம், கிரகபாவ சங்கியை 62½, 1983 இல் பிறந்த பூசநட்சத்திரம் நட்புப் பெற்ற 8இல் செவ்வாய், சிவந்த அழகிய தோற்றமுடைய பெண்ணுக்கு மணமகன் தேவை.
தொடர்பு:V.A.சிவராசா, 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் யாழ். - கண்டி வீதியில் பஸ்தியன் சந்திக்கு அருகில் பஸ்தியன் அச்சுக் கூடத்திற்கு மேற்குப்புறமாக உள்ள இல. 384 இல் 2 ½ பரப்பு வெறும் காணி விற்பனைக்கு உண்டு. கிணறும் குழாய்நீர் செதியும் உண்டு. விலை பரப்பு 18 இலட்சத்திற்கு மேல்.

தொடர்பு: ம.ம.மன்மதநாயகம் J.P
நெல்லியடி, கரவெட்டி.
தொ.பே. 226 3243.
இரவு 8மணிக்குப்பின் காலை 9மணிக்கு முன்.


கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலமாகவோ அல்லது விமானம் மூலமாகவோ உடனுக்குடன் உங்கள் பொதிகள் அனுப்பி வைக்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளியரின்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D.பெற்று உத்தரவாதத்துடன் உடன் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்பு: **EURO GROUPS**
0773846998, 0114542190.

## பாக்யா இசைப்பயிலகம்

மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு

**இசை, இசைவாத்திய வகுப்புகளுடன் ஓவியப் பயிற்சி வகுப்புகளும் புதிய பிரிவுகளாக நடைபெறுகின்றன. பழக விரும்புகிறவர் கள் தொடர்பு கொள்ளவும்.**

* சித்திரம்
* மிருதங்கம்
* வயலின்
* சங்கீதம்
* ஒகன்
* புல்லாங்குழல்

**பாக்யா காகிதாதிகள்**
121, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.
0773053129 (59865)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**2006 க.பொ.த (சா/த) பெறுபேறு**
**யா/ இடைக்காடு மகா வித்தியாலயம்.**
**இடைக்காடு**

| | |
|---|---|
| பே.குகநாத் | - 10A |
| பா.பிருந்தா | - 9A, B |
| க.சர்மிளா | - 9A, S |
| ப:சௌமியா | - 8A, B, C |
| க.கஸ்தூரி | - 8A, B, C |
| சி.தவதீஸ் | - 5A, 4B, S |
| த.சாருபன் | - 5A, 4B, C |
| கே.பிருந்தா | - 5A, 2B, 2C, S |
| சி.கஜனசனா | - 4A, 3B, 2C |
| இ.பத்மரதி | - 4A, 5C |
| வ.நிருஷா | - 4A, 4B, C |
| ச.மயூரன் | - 3A, 2B, 3C |
| செ.ஜெசிந்தா | - 3A, 2B, 3C |
| இ.நிசாந்தன் | - 2A, 4C, 2S |

மேற்படி விசேட சித்திகளைப் பெற்றுள்ள மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்களுக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
இடைக்காடு மகா வித்தியாலயம்,
இடைக்காடு.


வசீகர தோற்றத்திற்கு

## சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

[illegible]

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 222 2567

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**தவமணி கந்தையா**

கடந்த 31.03.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (30.04.2007) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### உருத்திரமூர்த்தி ஆதவன் (உரும்பிராய்)



உரும்பிராய் சிவன் வீதியைப் பிறப்பிடமாகவும் 24/3, றோகினி றோட், வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட உருத்திரமூர்த்தி ஆதவன் 28.04.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரம்பிள்ளை உருத்திரமூர்த்தி (அம்பாள் ஸ்ரோர்ஸ், கல்கமுவா), தனலட்சுமி (குஞ்சுபபா), தம்பதியரின் அன்பு மகனும் கல்பனா(கனடா), ரமணன் (ஆஸ்திரேலியா), தக்ஷனா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தாமரைச் செல்வன் (குமணன்-கனடா) அவர்களின் அன்பு மைத்துனரும் கருணியின் (கனடா) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (02.05.2007) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் பொறளை ஜெயரட்ண மலர்சாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே. : 0112506788

தகவல்:
சு.இராமலிங்கம்
(பெரியப்பா).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

# சீர் மங்கும் மேதினம்

நாளை மே முதலாம் திகதி. மேதினி எங்கும் மேதினம் - தொழிலாளர் திருநாள் - அனுஷ்டிக்கப்படும் வேளை அது. எனினும் இம்முறை இலங்கையில் அது மே முதலாம் திகதிக்கு முதல் நாளான இன்று இடம்பெறுகின்றது.

முன்னைய வருடங்களில் - தசாப்தங்களில் - கொண்டாடப்பட்டமைபோல எழுச்சியாக, மலர்ச்சியாக, உத்வேகத்தோடு இப்போதெல்லாம் மேதினம் அமைவதில்லை என்பது தெளிவு. உழைப்பாளர் வர்க்கத்தின் உழைப்பைப் போற்றி அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் எழுச்சிக் கோஷத்தோடு கொண்டாடப்படும் மேதினத்தின் சிறப்பும் தொனியும் காலம் செல்லச் செல்ல - இப்போது - மங்கிவருவது கண் கூடு. இதற்குக் காரணம் என்ன?

உலக ஒழுங்கு மாறிவருவதே இதற்கு அடிப்படை. அது எங்ஙனம் என்பதை இந்த உழைப்பாளர் தினத்தில் அசைபோடுவது பொருத்தமானது.

விடுதலையைத் தேடும் மனித நாகரிகத்தின் பயணம் அரசுகளின் உருவாக்கத்தைத் தொட்டு நிற்கின்றது. அதன் பின்னணியில்தான் சமூக உறவு முறைகளையும் அவற்றில் ஏற்பட்ட மாறுதல்களையும் பிரதி பலிப்புகளையும் நாம் அடையாளம் காணவேண்டும்.

மனித வாழ்வுக்கு பொருளுலகம் அத்தியாவசியமானது. அதுவின்றி அவனின் வாழ்க்கை சாத்திய மேயற்றது. பொருளுலகமன்றி மனித உயிர்ப்பும் இல்லை; உணர்வுமில்லை. அத்தகைய இந்தப் பொருளுலகின் சிருஷ்டிகர்த்தா அவன்தான். தனக்குத் தேவையான பொருளுலகத்தைத் தானே படைத்து அதற்குள் சிறைபட்டு, சிக்கி நிற்கின்றான். அதன் கர்த்தா வாகிய மனிதன்.

உழைக்கும் மனிதன், அவனின் உழைப்பாக வெளிப்படும் உழைப்புச் சக்தி அந்த உழைப்புச் சக்தியிலிருந்து உதயமாகும் உற்பத்தி உலகம் அந்த உற்பத்தி உலகிலிருந்து உருப்பெறும் உற்பத்தி உறவுகள், அந்த உற்பத்தி உறவிலிருந்து உருவாக்கமடையும் வர்க்கப் பிரிவுகள், அந்த வர்க்கப் பிரிவுகளிடையே முனைப்புறும் முரண்பாடுகள் என்று மனிதனின் உழைப்பிலிருந்து பொருளுலகம் விரிகின்றது.

மேற்படி வர்க்கப் பிரிவுகளிடையேயான முரண்பாடுதான் சுரண்டலாகின்றது. பொருளிய உற்பத்தி உலகில் முதலாளிய ஆதிக்க சக்தி தொழிலாளரின் ஆக்கசக்தியை விழுங்கிக் கொள்கின்றது.

அவனது உழைப்புச் சக்தியைப் பிழிந்து, உறிஞ்சி எடுக்கிறது. இதுதான் சுரண்டல்.

ஒரு காலகட்டத்தில் விவசாயப் புரட்சி ஒழுங்கு மாற, கைத்தொழில் புரட்சி பூத்தது. அங்கும் முதலாளி - தொழிலாளி என்ற வர்க்க பேதம் ஆழமாகப் புரையோடியது. தொழிலாளியின் வியர்வையிலும் உழைப்பிலும் உருவான உற்பத்தியை முதலாளியம் சுரண்டிக்கொண்டது.

இந்த ஒழுங்கு முறையில் - விவசாயப் புரட்சியும், கைத்தொழில் புரட்சியும் நிலைநிறுத்தப்பட்ட காலத்தில் - வியர்வை சிந்தி, உதிரத்தை உழைப்பாக்கி, கடினமாகக் கஷ்டப்பட்ட உழைப்பாளர் வர்க்கத்துக்கும், அவர்களின் கடின உழைப்பால் கிடைக்கும் நலன்களைச் சுரண்டி, விழுங்கி, வீங்கிப் பெருத்த முதலாளி வர்க்கத்துக்கும் இடையேயான முரண்பாடு முற்றியது.

அதனால், நசுக்கப்பட்ட உழைப்பாளர் வர்க்கத்தின் உரிமைக்குரல், அதனை ஈட்டுவதற்காக ஓங்கி ஒலிக்க வேண்டியதாயிருந்தது. அழுக்குப்படாத வெள்ளைச் சீருடைப் பணியாளரினதும், முதலாளி யரினதும் சுரண்டலிலிருந்து தொழிலாளர் வர்க்க மீட்சிக்காக அந்த வர்க்கம் கிளர்ச்சியும் எழுச்சியும் வெளிப்படுத்த வேண்டிருந்தது. அதுவே உழைப்பாளர் நாளான மேதின நிகழ்வுகளுக்கும் அப்போது உத்வேகமும் உந்துதலும் அளிக்கும் காரணியாயும் அமைந்தது.

ஆனால், இப்போது நிலைமையில் சடுதியான மாற்றம், விவசாயப் புரட்சியையும் கைத்தொழில் புரட்சியையும் தாண்டி, புதிய உலக ஒழுங்காக - அறிவுசார் அபிவிருத்தியாக - தகவல் தொழில் நுட்பப் புரட்சி வெடித்திருக்கின்றது.

விவசாய சமூகங்களையும், நிலமானிய சமூகங்களையும் விஞ்சி கைத்தொழில் சமூகங்கள் உயர்ந்த காலம்போய், இப்போது அதையும் தாண்டி, புதிய நூற்றாண்டில் அறிவு மைய சமூகம் உச்ச அபிவிருத்தியை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கின்றது.

இதனை இரண்டாம் கைத்தொழில் புரட்சி, பின் முதலாளித்துவ சமூக விருத்தி என்றெல்லாம் பலரும் வர்ணித்தாலும் முன்னைய அந்த சமூக முறைமைகளுக்கும் இப்போதைய அறிவியல் சமூக முறைமைக்கும் இடையே பாரிய அடிப்படை வேறுபாடுகள் உள்ளன.

பொருளிய உலகிற்கு அடிப்படையான உற்பத்தி, பொருட்செல்வத்தில் அளவிடப்பட்ட - அலகிடப்பட்ட - காலம் போய், இப்போது இந்த அறிவுமைய நூற்றாண்டில் அறிவு மட்ட நிலையின் அடிப்படையில் அது கணிப்பிடப்படும் நிலைமை உருவாகி வருகிறது.

இதனால் -

உற்பத்திச் செல்வ அளவீட்டில், முதலாளி - தொழிலாளி இடையே நிலவிய பாரிய தகைமை நிலை வேறுபாடு, அறிவுசார் உலகில் ஊழியர், பணியாளர் மற்றும் தொழில் கொள்வோர் இடையே குறுகிவிடுகின்றது. புதிய அறிவார்ந்த சமூகத்தில் உடல் உழைப்பு ஊழியர்கள், வெள்ளை உடை (Whitecollar) ஊழியர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் போகிறது. அந்தச் சமூகத்தில் அறிவு சார்ந்த பணியாளன் மதிக்கப்படுகின்றான். உயர்ந்த தகுதியும் உழைப்புக்குரிய வேதனமும் அவனுக்குக் கிட்டுகின்றன. அதனை இந்த இலத் திரனியல் அறிவுப்புரட்சி சாத்தியமாக்கியிருக்கின்றது. அபரிமிதமான அறிவுப் பெருக்க ஆற்றோட்டத்தின் காரணமாகப் புத்தெழுச்சிபெற்று, புது வடிவெடுத்துள்ள இந்தப் புதிய உலக ஒழுங்கில், தொழிலாளர் உரிமைகளுக்கான போராட்டக் குரலின் தேவை குன்றி வருவதால், மேதினத்தின் முக்கியத்துவமும் குறைந்து வருகின்றது என்பது ஓரளவு உண்மைதான்.

# பாதுகாப்புக்காக மின் துண்டிக்கும் சமயங்களில் ஜெனரேட்டர்களை இயக்காதீர் என அறிவுறுத்து

## உல்லாச விடுதிகளில் இதனால் பெரும் திண்டாட்டம்

கொழும்பு,ஏப்.30

பாதுகாப்புக் காரணங்களுக்காக அரசு கொழும்பு நகரில் இருட்டடிப்பை (மின்வெட்டு) செய்யும் வேளைகளில் உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள் உட்பட தொழில் நிறுவனங்களும் தமது ஜெனரேட்டர்களை இயக்கி வெளிச்சமேற்படுத்த முற்படக்கூடாது.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதனால் உல்லாசப் பயண ஹோட்டல்கள் பலமணி நேரங்கள் இருளில் மூழ்கடிக்கப்பட்டுவதால் உல்லாச பயணிகளுக்குப் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தி உள்ளதோடு, உல்லாசப் பிரயாணத்துறையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதாகக் கூறப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர் வான் தாக்குதல்கள் காரணமாக ஏற்பட்டுள்ள பீதியே இப்பாரிய பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த வியாழக்கிழமை கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தின் மீது இரண்டாவது தடவையாகத் தாக்குதல்களை நடத்த முயற்சித்த போது நள்ளிரவு வேளையில் திடீரென இரண்டு மணிநேர மின் துண்டிக்கப்பட்டு கொழும்பு நகரம் இருட்டடிப்புச் செய்யப்பட்டது.

இதனால் தலைநகரில் உள்ள பிரபல ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

அங்கு தங்கியிருந்த வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இதனால் பெரும் பீதிக்கு உள்ளாக்கப்பட்டனர்.

'மெழுகுவர்த்திகளின் துணையுடனேயே சிறிய வெளிச்சங்களை ஏற்படுத்த முடிந்தது. இது உல்லாசப் பயணிகளுக்குப் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்திவிட்டது' என்று ஐந்த நட்சத்திர ஹோட்டல் முகாமையாளர் ஒருவர் கூறினார்.

இதேபோன்று நேற்று அதிகாலைவேளை தலைநகரின் கேந்திர நிலையங்கள் மீது வான் புலிகள் தாக்குதல் நடத்திய போதும் இவ்வாறு இரண்டு தடவைகள் அரசினால் இருட்டடிப்பு மேற்கொள்ளப்பட்டது.

வான் புலிகள் இவ்வாறு தாக்குதல்களை நடத்தும்போது அவர்களது விமானங்களை இனங்கண்டு எதிர்த் தாக்குதல் நடத்தி அதனை முறியடிப்பதற்கு அவசியமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இவ்வாறு இருட்டடிப்புச் செய்யப்படுகின்றது. இவ்வேளையில் உல்லாசப் பயண ஹோட்டல்களோ அல்லது தொழில் நிறுவனங்களோ மாற்று ஏற்பாடாக ஜெனரேட்டர்களை இயக்கி வெளிச்சம் ஏற்படுத்த முற்பட்டால் அது தமது இராணுவ நடவடிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என பாதுகாப்புத் தரப்பில் கூறப்படுகிறது.

இதனால் ஹோட்டல் நிர்வாகங்கள் இவ்விடயம் தொடர்பாக தமது வாடிக்கையாளர்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும்.

உல்லாசப் பயணிகள் பாதுகாப்பு உஷார்ப்படுத்தும் வேளைகளில் தமது அறைகளின், கேட்டின் சீலைகளை முற்றாக மூடிவிட வேண்டும் எனவும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, இவ்வாறான சந்தர்ப்பங்களில் வாகனங்கள் எதுவும் ஹோட்டல்களுக்கு உள்நுழைவதற்கோ ஹோட்டல்களில் இருந்த வெளியேறுவதற்கோ அனுமதிக்கக்கூடாது எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் உல்லாசப் பயணத்துறைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (சி)

# பாதாளக் குழு உறுப்பினர் கொழும்பில் சுட்டுக்கொலை!

கொழும்,ஏப். 30

கொழும்பு புளுமெண்டால் பகுதியில் வைத்து பாதாள உலகத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் இனந்தெரியாத ஆயதக் கும்பலினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் பாதாள உலகத்தைச் சேர்ந்த இந்த நபரை அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத ஆயுதக் கும்பல் ஒன்று சுட்டுக் கொலை செய்திருக்கின்றது. அந்தக் கும்பல் பின்னர் வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தவாறு தப்பிச் சென்றதாக அறியவந்துள்ளது. (சி)

# புட்டபர்த்தி இளைஞர் மாநாட்டுக்கு குடாநாட்டிலிருந்து 80 இளைஞர்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.30

சத்திய சாயி பாபாவை தரிசிக்க யாழ். மாவட்டத்தில் இருந்து 80 இளைஞர்கள் உட்பட 120 பேர் இந்திய செல்லவுள்ளனர்.

வட பிராந்திய சத்திய சாயி சமித்தி இணைப்பாளரும் சட்டத்தரணியுமான இரா.வசந்தசேனன் இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

எதிர்வரும் ஜூலை 22 முதல் ஒகஸ்ட் 5 வரையிலான காலப்பகுதியில் புட்டர்பத்தியில் இளைஞர் மாநாடு இடம்பெறவுள்ளது.

சர்வதேச ரீதியில் மேற்படி மாநாட்டில் 8 ஆயிரம் இளைஞர்கள் பங்குபற்றி பாபாவைத் தரிசிக்கவுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் இருந்து சத்தியசாய்பாபாவை தரிசிக்க செல்லும் பக்கதர்களுக்கு யாழ். அரசாங்க அதிபர் விசேட கப்பல் வசதியை வழங்க இணங்கியுள்ளதாக இணைப்பாளர் சட்டத்தரணி இரா.வசந்தசேனன் தெரிவித்தார்.

இதேவேளை -

யாழ்.குடாநாட்டில் இருந்து விசேட நாடகக் குழுவொன்றும் புட்டபர்த்திக்கு சென்று பங்குகொள்ளவுள்ளதாகவும் இணைப்பாளர் தெரிவித்தார். (அ-95)

# கிராம ராஜ்ஜிய - மாவட்ட சபை கலந்த அதிகாரப் பகிர்வு முறை

## ஸ்ரீ.ல.சு.கவின் தீர்வு யோசனை இது

கொழும்பு, மார்ச் 30

இந்தியாவில் நடைமுறையிலுள்ள கிராம ராஜ்ஜிய முறையை ஒத்ததான ஆட்சிமுறை தொடர்பான யோசனைகளையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனைகள் நாளை வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சி முன்வைக்கவுள்ள கிராமராஜ்யம், மூன்று மட்டங்களிலான அதிகாரப் பகிர்வு ஆட்சி முறையாக அமையும் என்று தெரியவருகிறது.

இந்தியாவில் உள்ள கிராம ராஜ்ஜிய ஆட்சிமுறையை அடியொற்றியதாக ஸ்ரீ.ல.சு.கட்சியின் யோசனையில் பரிந்துரைக்கப்படும்.

மாவட்ட சபைகள் அமைச்சுப்பட்டு அவை கிராம ராஜ்ஜிய சபைக்கான உறுப்பினர்களை தெரிவுசெய்யும். இந்த சபைக்கான மாவட்ட அமைச்சரை ஜனாதிபதி நியமிப்பார்.

இலங்கை முழுவதும் 25 மாவட்ட சபைகள் அமைக்கப்படும்.

இதேவேளை - இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகத் தற்போது நடைமுறையிலுள்ள மாகாண சபை ஆட்சி முறைக்கு கூடுதல் அதிகாரம் வழங்கவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யோசணையில் ஓர் அம்சமே சேர்க்கப்பட்டிருந்ததாகவும் -

எனினும், இந்த யோசனை தொடர்பாக கடந்த 24ஆம் திகதி கட்சியின் மத்தியகுழு கூடிய போது அது நிராகரிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

மாகாணசபைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கமுடியாது என்றும் - மாவட்ட சபை அமைப்பிலான ஆட்சி அதிகாரத்தையே வழங்கவேண்டும் என்றும் - ஜனாதிபதி அக்கூட்டத்தில் தெரிவித்தார் எனக் கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் இந்த முடிவால் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# கால் நடைகளை வெட்டுவோர் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும்

குருநகர், ஏப்.30

பருத்தித்துறை பிரதேச சபை, வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் ஆகிய பகுதிகளில் இறைச்சிக்காகக் கால்நடைகளை வெட்டுவோர், இறைச்சிக்கடை குத்தகையாளர் ஊன்வினைஞர் கட்டளைச் சட்டங்களுக்கு அமையச் செயற்பட வேண்டும்.

இந்த நடைமுறையை உறுதிப்படுத்துமாறு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி சம்பந்தப்பட்ட சபைகளின் செயலாளர்களைக் கோரியுள்ளார்.

இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் யாவும் 24மணி நேரத்திற்கு முன்னர் கொல்களத்தில் கட்டிவைக்கப்பட்டு உரிய பிரிவுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பார்வையிட ஏற்பாடு செய்ய வேண்டும். வெட்டப்படும் போதும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பார்வையிட்டு அனுமதி வழங்க வேண்டும். அதன் பின்னரே விற்பனை செய்யப்படவேண்டும்.

இச்சட்ட விதிகளுக்கமைய செயற்படுவதை சபைச் செயலாளர்கள் உறுதி செய்யவேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (202-51)

# கரவெட்டி இலக்கியக் கலைப் பெருவிழா போட்டியில் தெரிவு செய்யப்பட்டவர்கள்

கரவெட்டி,ஏப்.30

வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலகம் நடத்திய தேசிய இலக்கிய கலைப் பெருவிழாவை ஒட்டிய போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. முடிவுகளின் விவரம் வருமாறு -

**கட்டுரை**

**கனிஷ்டபிரிவு** - பா.சரண்யா (விக்னேஸ்வராக் கல்லூரி), ந.நிரோஷா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஜெ.மதுசாந்தினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), நா.வினோத் (கரணவாய் பொன்னம்பலம் வித்தி.)

**சிரேஷ்டபிரிவு** - பா.யூடிட் பாமினி (விக்னேஸ்வராக் கல்லூரி), தி.கணேசதாசன் (விக்னேஸ்வராக் கல்லூரி), வ.பிரசீத் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), க.தனேஸ்வரன் (விக்னேஸ்வராகக் கல்லூரி).

**சிறுகதை**

**கனிஷ்ட பிரிவு** - கி.வஜீரணி (வடமராட்சி மத்திய கல்லூரி) அ.அரவிந்தன் (கரணவாய் பொன்னபலம் வித்தி.), பா.பாலகௌரி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**சிரேஷ்டபிரிவு** - ஸ்ரீ.சுபோதினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கோ.துஷந்தினி (ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமம்), ஜெ.துஷந்தினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி). (202-70)

## நாளை

சித்திரை - 18
செவ்வாய்க்கிழமை
01.05.2007
திதி: சதுர்த்தசி
பிற்பகல் : 01.46
நட்சத்திரம்: சித்திரை -
பிற்பகல் : 05.46
சுபநேரம் : 10.27 - 11.57
ராகுகாலம் : 02.57 - 04.27

# பயிர்கள் விஷமிகளால் அழிப்பு

எள்ளு மற்றும் சனல் பயிர்கள் நள்ளிரவு வேளையில் விஷமிகளால் அழிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் நவாலிவழுக்கையாற்று படுக்கை ஈச்சந்தரவை பகுதியில் இடம்பெற்று வருகிறது.

கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு விவசாயிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும், எள்ளு, சணல் பயிர்கள் வெட்டி [illegible] விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (அ-95)

# செட்டிபுலத்தில் மீன்பிடிக்க அனுமதியில்லை; பெரும் கஷ்ட நிலையில் 672 குடும்பங்கள்

வேலணை, செட்டிப்புலம் - துறையூர் கடற் பகுதியில் தொழில் செய்வதற்குத் தற்போது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் 672 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கின்றன.

இந்நிலை தொடர்ந்தால் தாம் பட்டினிச் சாவை எதிர்கொள்ள நேரிடும் என பாதிக் கப்பட்டோர் கவலை தெரிவிக்கின்றனர்.

உடனடியாக தாம் தொழில் செய்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

இல்லையெனில் நிவாரண உதவியோ அல்லது மாற்றுத் தொழில் ஏற்பாடோ செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோருகின்றனர். (202-95)

# நியமனம்

வடமராட்சி, ஏப் 30.

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடகிழக்கு மகா சங்கத் தலைவராக அருட்திரு எஸ். எஸ். ஞானராஜா அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். (202)

# இன்று மஹாகும்பாபிசேகம்

யாழ்ப்பாணம், ஏப் 30.

பிரசித்தி பெற்ற நவாலி - அட்டகிரி சிவன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை ஸ்ரீ துர்க்கை அம்மன் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இடம்பெறுகிறது.

காலை 9 மணிக்கு ஸ்தூபி அபிஷேகத்தினை தொடர்ந்து 9.08 முதல் 10.59 வரையுள்ள சுப முகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் இடம்பெறும் என்று ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கா.துரைச்சாமிக் குருக்கள் அறிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகம்நடைபெறும். (அ-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கு நன்மை இன்றேல் அரசிலிருந்து விலகிவிடுவோம்!

## முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் எச்சரிக்கை

நிந்தவூர், ஏப்.30

''ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாளை தமது தீர்வுத்திட்ட முன்யோசனைகளைச் சமர்ப்பிக்கவுள்ளது. இதில் முஸ்லிம்களுக்கு நன்மை பயக்கும் விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். அன்றேல் முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால நன்மை ரீதியாக, அரசுடன் இணைந்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் அக்கட்டத்தில் சில தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.''

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும், உபபயிர்ச் செய்கை அபிவிருத்தி பிரதிஅமைச்சருமான அல் - ஹாஜ் எம்.ரீ.ஹஸனலி, அரசுக்கு எச்சரிக்கை சமிக்ஞை விடுத்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் பிரதேச அமைப்பாளர்களின் ஒன்றுகூடல் கூட்டம் ஒன்று சாய்ந்தமருது பலநோக்குக் கூட்டுறவுச்சங்க வளாகத்திலுள்ள - இளைஞர் காங்கிரஸ் கூட்டமைதானத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதி அமைச்சர் ஹஸனலி மேற்கண்டவாறு கூறினார்.

இளைஞர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் ஏ.எம்.ஜெமீல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், பிரதி அமைச்சர் எம்.பைஸால் காசீம் உட்பட அரசின் உயர்பீட உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

பிரதி அமைச்சர் ஹஸனலி தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

''நாம் இன்று முக்கிய காலகட்டத்திலுள்ளோம். நாட்டை ஆட்சிசெய்யும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நாளை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தனது தீர்வுத்திட்ட முன்யோசனைகளைச் சமர்ப்பிக்கவுள்ளது.

இந்த முன்யோசனைகளில் முஸ்லிம் சமூகத்துக்காக முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே அரசிடம் விடுத்த கோரிக்கைகளை முன்வைத்து எத்தகைய அனுகூலங்கள் கிடைக்கும், முஸ்லிம் சமூகத்துக்கு நன்மை பயக்கும் எத்தகைய தீர்மானங்களை எடுக்கப்போகின்றார்கள் என்பவற்றை மிக உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கின்றோம்.

ஏற்கனவே எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி சமர்ப்பித்துள்ள தீர்வுத்திட்ட முன்யோசனைகளில் நாம் முன்வைத்த முஸ்லிம்களுக்கான தனித்தரப்பு விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சமூகரீதியான அரசியல் அதிகாரப் பகிர்வு முஸ்லிம் சமூகத்திற்கும் ஏனைய சமூகங்களைப்போன்று வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி இவ்வாறு முஸ்லிம்களுக்கு நன்மை பயக்கும் விடயங்களை தீர்வுத் திட்ட யோசனையில் உள்ளடக்க முடியும் என்றால் -

நாம் அரசில் இணைந்துள்ள நிலையில் இதைவிடக் கூடுதலாகவும் தீர்க்கமாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெளியிடப்போகும் தீர்வுத் திட்ட யோசனைகளில் முஸ்லிம்களது விடயம் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை முஸ்லிம் சமூகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

அரசியல் அதிகாரம் எம்மிடமுள்ளது என்பதில் பிரச்சினையில்லை. என்றாலும் பூரணமான வெற்றி முஸ்லிம் சமூகத்திற்குக் கிடைக்க நிலத் தொடர்புள்ள அரசியல் அதிகாரத்தை நாம் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இதைப் பெறுவதற்காகத் தான் நமது மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரப், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைத் தோற்றுவித்தார்.

ஆனால், தற்போது இந்த நிலத்தொடர்பு பற்றி நாம் பேசுவதே இல்லை. கட்சியின் இலக்குகள் இப்போது எம் சிந்தனைகளிலிருந்து மறைந்து கொண்டிருக்கின்றது.

தேவையற்ற விடயங்களை முன்னுரிமைப்படுத்திப் போராடும் நிலையில் நாமுள்ளோம் - என்றார்.

# நெடுந்தீவில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாம்

நல்லூர், ஏப்.30

தீவக லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 'சிக்கின் குனியா' உட்பட இரத்த அழுத்தம் நீரிழிவு மற்றும் கண்பரிசோதனைகளும் நடைபெற்று இலவச மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டன. நோய்கள் குறித்த ஆலோசனைகளும் வைத்திய அதிகாரிகளால் வழங்கப்பட்டன. பெரும்பாலான நோயாளர்கள் கந்து கொண்டு சிகிச்சை பெற்றனர்.

(அ-111)

# பொதுசன மாதாந்த உதவிப் பணக்கொடுப்பனவு சண்டிலிப்பாயில் மீளாய்வு

வலி.தென்மேற்கு, ஏப்.30

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் கொடுப்பனவைப் பெற்று வருபவர்களின் விவரங்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

மேற்படி பிரிவின் சமூக சேவை உத்தியோகத்தர் வே.அருந்தவராசா இந்த மீளாய்வை மேற்கொண்டு வருகின்றார். தமது உதவிப் பணக் கொடுப்பனவு அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை மீளாய்வின் போது சமர்ப்பித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுள்ளார்.

எதிர்வரும் எட்டாம் திகதி மானிப்பாய் வடக்கு ஜே/137 பிரிவிலும் 11.05.2007ஆம் திகதி மானிப்பாய் கிழக்கு ஜே/138 பிரிவிலும் 15.05.2007 மானிப்பாய் தெற்கு ஜே/139 பிரிவிலும் 17.05.2007ஆம் திகதி மானிப்பாய் மேற்கு ஜே140 பிரிவிலும் இம்மாதம் 18ஆம் திகதி சண்டிலிப்பாய் வடக்கு ஜே/141 பிரிவிலும் 22ஆம் திகதி சண்டிலிப்பாய் மத்தி ஜே/142 பிரிவிலும் 24ஆம் திகதி இதே பிரிவிலும் 25ஆம் திகதி மாகியப்பிட்டி ஜே/144 பிரிவிலும் 29ஆம் திகதியன்று வடலியடைப்பு ஜே/145 பிரிவிலும் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

# திருமலை படுகொலைகள் குறித்து ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு அங்கு சென்றது

கொழும்பு, ஏப்.30

திருகோணமலையில் கடந்த காலங்களில் இடம்பெற்றுவந்த படுகொலைகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு நேற்றுமுன்தினம் அங்கு சென்றுள்ளது.

முன்னாள் நீதிபதி எம்.கே.புத்துலாகம, செயலாளரான எஸ்.ரி.பிரியதாச உட்பட 21 பேர் அடங்கிய இக் குழு சனிக்கிழமையன்று திருகோணமலை புறப்பட்டு சென்றது.

தற்போது ஜனாதிபதியின் கீழ் நேரடி மேற்பார்வையில் இயங்கும் இவ் விசாரணை ஆணைக்குழு திருகோணமலையில் மர்மமான முறையில் கொல்லப்பட்டவர்களின் விவரங்களைத் திரட்டி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# அரச ஊழியர் ஆக்கத்திறன் போட்டி: விண்ணப்பம் கோரப்படுகின்றது

கரவெட்டி, ஏப்.30

கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமைகள் அமைச்சு நடத்தும் அரச ஊழியர்களுக்கிடையேயான ஆக்கத்திறன் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ் - சிங்கள மொழிகளிலான சிறுகதைகள், பாடநூல்கள், கவிதைகள், சிறுவர் கதைகள் மற்றும் குறு நாடகங்கள் என ஐந்து பிரிவுகளாக இப் போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டியாளர்கள் அனைத்துப் போட்டிகளிலும் பங்குபற்ற முடியும். எனினும் ஒவ்வொரு ஆக்கத்திற்கும் ஒவ்வொரு விண்ணப்பத்தை அனுப்பிவைக்க வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் 30.05.2007 ஆம் திகதிக்கு முன்னர் ''அரச ஊழியர்களின் ஆக்கத்திறன்களுக்கிடையிலான போட்டி - 2007'' என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு ''செயலாளர், கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமைகள் அமைச்சு, 8ஆம் மாடி செத்சிறிபாய, பத்திரமுல்ல'' என்னும் முகவரிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இது தொடர்பான மேலும் தகவல்களைப் பெற விரும்புவோர் 0112862679 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும். (ப-203-70)

# மீசாலை மேற்கில் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.30

மீசாலை மேற்குப் பகுதி நேற்று ஞாயிற்றுக்கிழமை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் பகல் ஐயா கடையடிப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோக சத்தம் கேட்டதாகவும் அதனையடுத்து நேற்று சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (1-207)

# விஞ்ஞான அறிவுப் போட்டி முடிவுகள் வெளியானது

யாழ்ப்பாணம், ஏப்.30

யாழ். இந்துக் கல்லூரி விஞ்ஞான மன்றத்தால் 2006ஆம் ஆண்டு நடத்தப்பட்ட விஞ்ஞான அறிவுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றில் முதல் மூன்று இடங்களையும் பெற்றோர் விவரம் வருமாறு:-

**கனிஷ்ட பிரிவு**

ஸ்ரீ.கவிப்பிரியன் (யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி), த.கஜேந்திரன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), வெ.நாராயணி (யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி),

**இடைநிலைப் பிரிவு**

ரி.சுலன்ஷன் (யா/மத்திய கல்லூரி), வா.நிஷாந்திகா (யா/ வேம்படி மகளிர் உ/த பாடசாலை), வி.கோபிகா (யா/ மீசாலை வீரசிங்கம் ம.ம.வி), ஸ்ரீ.விசாகன் (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) -

**சிரேஷ்ட பிரிவு**

ஜெ.மிர்னாலினி (யா/வேம்படி மகளிர் உ/த பாடசாலை), சி.சகிலா (யா/ வேம்படி மகளிர் உ/த பாடசாலை), வி.நிஷாந்தி (யா/ நெல்லியடி ம.ம.வி), பா.கஜலக்ஷன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) -

**ஆங்கில மொழி மூலம் தோற்றியோர்**

**இடைநிலைப் பிரிவு**

ரி.கவிராஜ்(யா/ கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி), வி.லாவண்யா (யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), யோ.லோகிதா (யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்). (203)

# உதயன் அலுவலக...

கும்பல் ஒன்று முன்னிரவு வேளை 'உதயன்' அலுவலகத்துக்குள் புகுந்து தாறுமாறாகத் துப்பாக்கிச் சூட நடத்தி இருவரை அந்த இடத்திலேயே படுகொலை செய்து, மற்றும் பலரைக் காயப்படுத்தி, அலுவலக உபகரணங்களை நாசப்படுத் திய கொடூரம் இடம்பெற்று நாளைமறு தினம் ஓராண்டு பூர்த்தியாகவிருக்கையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

உலக ஊடக சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்படும் சமயத்தில் அந்தத் தாக்குதல் இடம்பெற்றது. அதன் பின்னர் 'உதயன்' பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டிருந்த அலுவலக சாரதி பாஸ்கரன் உதயனின் வாகனத்துக்குள் வைத்து சுட்டுப் படு கொலை செய்யப்பட்டார்.

உதயனின் பத்திரிகைத் தாள் களஞ்சியம் ஆயுததாரிகள் குழுவால் தீவைத்து எரிக்கப்பட்டதால் நிறுவனத்துக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டது.

கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக பத்திரிகை அச்சிடுவதற்கான தாளை கொழும்பிலிருந்து தருவிக்கமுடியாமல் அந்தரித்த உதயன் நிறுவனத்துக்கு தற் போதுதான் சொற்ப அளவு பத்திரிகைத் தாள் எடுத்து வர அனுமதி கிடைத்தது.

அந்தப் பின்னணியில் உதயனின் மற்றொரு பணியாளர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

செய்தியாளர் அமரர் ரஜிவர்மன் 'நமது ஈழநாடு' பத்திரிகையில் சில வருடங்கள் செய்தியாளராகப் பணியாற்றியவர். அந்தப் பத்திரிகையின் நிர்வாக இயக்குநரும் முன்னாளர் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவமகாராஜா சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து அந்தப் பத்திரிகை மூடப்பட்டது. அதைத் தொடர்ந்து சொற்பகாலம் தினக்குரலிலும் அதன் பின்பு உதயன் நிறுவனத்திலும் ரஜிவர்மன் பணியாற்றி வந்தார்.

# புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலைமையை மீட்டெடுக்கமுடியாது. அவ்வாறு புலிகள் இயக்கத்தின் இலக்கு வெற்றியளிக்கவில்லையெனக் கூறிக்கொண்டு குறுகியகால இலாபத்தைப் பெற்றுக்கொள்வது இதற்கான தீர்வல்ல - ஐக்கிய தேசியக்கட்சியின் போர்நிறுத்தமே இவை யாவற்றுக்கும் பொறுப்புச்சொல்ல வேண்டுமென்று சகல பிழைகளையும் எம்மீது சுமத்தி அரசியல் விளையாட்டில் தங்கியிருப்பதனால் நாட்டுக்கு நன்மையெதுவும் விளையப் போவதில்லை.

நாங்கள் செய்யவேண்டியதெல்லாம் யதார்த்த பூர்வமான மதிப்பீடொன்றின் மூலம் எதிரியின் பலத்தை அடையாளங்கண்டு அதற்கு தேவையான யுத்த மற்றும் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதுமாகும். அந்நடவடிக்கைகளின் இறுதி இலக்காக இருக்கவேண்டியது என்றுள்ளது. (சி)

# சவால்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றாக இருக்கி[illegible]து.

இந்நிலைமையை இந்நாட்டுத் தொழிலாளர்கள் சிறப்பாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். பயங்கர வாதத்திற்கு எதிரான போராட்டத்திற்கும் அரசியல் பேதமற்ற நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் கடந்த காலங்களில் இந்நாட்டுத் தொழிலாளர்கள் ஒழுக்கத்துடனும் கவனமாகவும் எங்களுக்கு ஒத்துழைப்பு நல்கியது இந்த உணர்வுடனே யாகும்.

அதேபோல் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கும் அரசியல் பேதமற்ற நாட்டைக்கட்டி எழுப்பி அபிவிருத்தியை மேன்மேலும் முன்னேற்றுவதற்கும் நாட்டின் ஆட்புல ஒருமைப்பாடு தேசிய ஒற்றுமை என்பவற்றைப் பாதுகாப்பதற்கும் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு என்றும் அரசிற்குக் கிடைக்கவேண்டுமென நான் எதிர்பார்ப்பதோடு புதிய இலங்கையொன்றைக் கட்டியெழுப்புதவற்கு இலங்கை தொழிலாளர் சமூகத்திற்கு அனைத்து விதமான பலமும் தைரியமும் கிடைக்க வேண்டுமென இன்றைய தொழிலாளர் தினத்தில் நான் வாழ்த்துகின்றேன். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நீர்வேலியில் பால் விற்பனை நிலையம்

அரியாலை, ஏப்.30

நீர்வேலிப் பகுதியில் பால் விற்பனை நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் இந்த பால் விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையம் திறந்துவைக்கப்பட்டதால் மக்கள் பாலை எதுவித சிரமம் இன்றிப் பெற்றுக்கொள்ள முடிவதாக பாவனையாளர்கள் தெரிவித்தனர். (அ-17)


**கணக்கீடு**

P.பகீரதன்

தொடர் பரீட்சையும் மாபெரும் கருத்தரங்கும்

அனுமதிகளை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

விக்னா நாவலர் Business College

* அனுமதிக்கட்டணம் 400/=
* பரீட்சைக்குத் தோற்ற விரும்புப் மாணவர்கள் மே முதலாம் திகதி 2 மணிக்கு முன் பெற்றுக்கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.